26-2-1994
27-2-1994

# ‘பிரபா’ பதில் தந்தால் நிபந்தனையற்று பேசலாம்

## — பிரதமர் ரணில் பேட்டி

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகள் குறித்து அரசாங்கம் விடுத்த அழைப்புகளிற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடமிருந்து நேரடியான பதில் வந்தால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை ஏற்படலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார் - அப்பேட்டி வருமாறு:

கேள்வி:- ஜனாதிபதி இலங்கையின் பெரும்பான்மை, சிறுபான்மையினங்களை ஒன்றுபடுத்தக்கூடிய வகையில் உரையாற்றியிருக்கிறார். பெரும்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 16 இதழ் 18
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-2-1994

# கிளாலி கடலில் மீண்டும் ஆபத்து

(கொழும்பு)

வடக்கில் பொதுமக்களும் புலிகளும் பயன்படுத்தும் கிளாலி கடலில் மீண்டும் மரணங்கள், ஆபத்துக்கள் திரும்பியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது. பி. பி. ஸி மேலும் கூறுகையில், கிளாலி கடல் நீரேரிக்கு அருகிலிருந்த பூநகரி படைமுகாம் அழிக்கப்பட்டதன் பின் பொதுமக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

### விமானத் தாக்குதலின்போது

# கிளாலியில் பயணம் செய்த முப்பது பேரைக் காணவில்லை?

## பயணிகள் கூறியதாக பி.பி.ஸி. தகவல்

(கொழும்பு)

கிளாலி கடல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பயணிகள் படகுகள் மீது போர் விமானங்கள் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலில், 30 பேர் காணமற் போய்விட்டதாகவும், இவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனத் தாங்கள் அஞ்சுவதாகவும் உயிர் தப்பி வந்த பயணிகள் கூறியதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இது பற்றி பி. பி. ஸி. மேலும் கூறுகையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கிளாலி ஊடாக 60க்கும் மேற்பட்ட படகுகளில் 600 பயணிகள் பயணம் செய்து கொண்டிருந்தபோது, விமானங்கள் படகுகள் மீது மிகக் கடுமையாகத் தாக்கி விமானத் தாக்குதல் இடம்பெற்றபோது படகில் இருந்த வர்கள் கத்திக் குழறிக் கூச்சலிட்டதாகவும், சிலர் படகு

(4-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் சிவில் நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அடுத்த மூன்று மாதத்திற்குள், பதவி வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்படவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபை ஆகியவற்றுக்குப் பணிப்புரை வழங்குவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வழமையான சிவில் நிர்வாகத்தைக் கூடிய விரைவில் மீண்டும் நிலைநாட்டுவது பற்றிச் சிபாரிசு செய்வதற்காக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவினால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

# தாண்டிக்குளம் பாதையூடாக போக்குவரத்திற்கு தடை

(வவுனியா)

வவுனியா - தாண்டிக்குளம் பாதை, இன்றும் நாளையும் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டிருக்கும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபைத் தேர்தல் நாளை முதலாம் திகதி நடைபெறவுள்ளதால் இன்று 28ம் திகதியும், நாளை முதலாம் திகதியும் தாண்டிக்குளம் ஊடாக பொதுமக்கள் பயணம் செய்வதைப் பொலி

(4ம் பக்கம் பார்க்க)

# சகல இடமாற்றங்களும் கிழக்கில் ரத்து

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலிருந்து சகல இடமாற்றங்களும் உடனடியாக நிறுத்தி வைப்பதென அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அமைச்சரவையின் இந்த முடிவு அடுத்த ஓராண்டு காலத்திற்கு அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தும் முகமாகவே இந்த திட்டம் அமுலிற்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை உடனடியாக செயற்படுத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாம். (இ)

# படையினரின் உதவியுடன் அரசு தேர்தல் மோசடிக்கு திட்டம்

## — சிறிமா கூறுகிறார்

(கொழும்பு)

கிழக்கில் நாளை நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் இராணுவத்தினரும், பொலிசாரும் ஐ.தே. கவுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; வாக்குப்பெட்டிகள் பல இவர்களால் நிரப்பப்பட்டுள்ளன என்று தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இந்த மோசடியில் இராணுவத்தினரும் ஏனைய படையினரும் சம்பந்

(4ம் பக்கம் பார்க்க)

# யு.என்.எச்.சி.ஆர். செயற்பாடு விரிவடைகிறது

(திருநெல்வேலி)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய செயற்பாடுகள் இவ்வருடத்திலிருந்து விரிவுபடுத்தப்படவிருப்பதாக யாழ். வந்த யு. என். எச். சி. ஆர். ஜெனிவா அதிகாரி திரு. விகோ தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்; மடு, பாலம்பிட்டி, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய வசதி குறைந்த இடங்களில் இச்செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்குத் தமது வளிக்கும் வகையில் வாழ்வாதார வசதிகள், அவர்களுக்கான வருமானங்களை ஏற்படுத்த உதவியளித்தல், கல்வி வசதி செய்து கொடுத்தல், மற்றும் வீதிகளைப் புனரமைத்தல் ஆகிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் இவை உடனடியாக செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(157-இ)

# யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் புலிகள் சந்தித்து பேச்சு

(திருநெல்வேலி)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய யு. என். எச். சி. ஆர். பிரதிநிதிகள் நேற்றுக் காலை 10-30 மணிக்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தினர்.

நேற்றுக்காலை இடம் பெற்ற இச்சந்திப்பில் மடு, பாலம்பிட்டி பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களை இம்மாதம் 20-ம் திகதியிலிருந்து யு.என். எச்.சி.ஆர். ஆரம்பித்துள்ளது பற்றி பேச்சுக்களை நடாத்தினர்.

ஜெனிவா அதிகாரியான திரு. விகோ, ஐ. நா. அதிகாரிகளான டேவிட் கறறின், மக்கா ஆகியோருடன் யாழ். பிரதிநிதி ஜெ. அ. அசோக்

(4ம் பக்கம் பார்க்க)

# புக்காரா நோட்டம்

(எழுதுமட்டுவாள்)

நேற்று காலை 10-45 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று கிளாலி, அல்லிப்பளை, கடற்கரையை உள்ளடக்கிய பகுதிகளில் வட்டமிட்டு சென்றது. (170-இ)

## வரிவிளம்பரம்

### 1 - 03-94 வியாழவக்கிரம் ஆரம்பம்

தேர்தல் ஆண்டில் வியாழ வக்கிரம் தேர்தல் மோசடிகளையும், வன்செயல்களையும் உண்டாக்கும். சத்தாவின் சனிமாற்றம் ரூபா 10/- விற்பனையாகின்றது. சோபிதா, யாழ்ப்பாணம். (கி-834)

### தவறிவிட்டது

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கும், கொழும்புத்துறை சூசையப்பர் ஆலயத்துக்குமிடையில் கைச்செயின் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் பற்றிக் சேவியர், இல: 9, ஒடைக்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(கி-837)

### 25 வருட அனுபவம்

இருபத்தைந்து வருட அனுபவமுள்ள அனுபவசாலியின் மேற்பார்வையில் சகல பழைய, புதிய, சுவர் மணிக்கூடுகள், மேசை மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். டிக்சா அன் றேடியோ வேக்ஸ், 28½, ஸ்ரான்லி வீதி (வாளவில் கூப்பர் அருகாமை) யாழ்ப்பாணம், கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(எ 3842)


## நாயாறு பகுதியில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு நாயாறுப்பகுதியில் கடந்த வார இறுதியில் விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சு நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் இரு முகாம்களை இலக்குவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தெரிய வரவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (கி)

## குழந்தைகளுக்கு உதவ
## பிர. இந்து மாமன்றம் நிதியுதவி வழங்கும்

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேசசபைச் செயலாளர் தமது பகுதியில் உள்ள 28 கிராமசேவை அலுவலர்கள் பகுதிகளிலும் தாய் தந்தையை இழந்த குழந்தைகள் விபரங்களைக் கிராம அலுவலர்களை உடனடியாகச் சேகரிக்கும்படி பணிப்புரை வழங்கியுள்ளார்.

தாய், தந்தையை இழந்த குழந்தைகளுக்கு பிரித்தானிய இந்து மாமன்றத்தினால் நிதிஉதவி வழங்கப்படவுள்ளது. எனவே தாய், தந்தையை இழந்த குழந்தைகளை வைத்து பராமரிப்போர் உடனடியாக தமது பகுதிக்கிராம அலுவலர்களிடம் நேரில் சென்று பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். பிரதேசசபைச் செயலாளர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார். -154-கி

## கோபாலசாமியின்
## வாக்கு மூலத்திற்கு
## கருணாநிதி ஆட்சேபம்

(சென்னை)

ராஜீவ் காந்தியின் கொலை பற்றிய சதி தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜெயின் கமிஷன் முன்பு வை. கோபாலசாமி தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூலத்தில் சில பகுதிகளுக்கு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

1990-ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பதற்காக கோபாலசாமி யாழ்ப்பாணம் சென்றார். அவர் கொடுத்த வாக்குமூலத்தில் இலங்கையின் வடக்குப் பகுதிகளுக்குச் சென்றதாக மட்டும் கூறியிருக்கிறார். யாழ்ப்பாணம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த கோபாலசாமி அஞ்சுகிறார் என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை அறிந்தும் சாதி தான் இலங்கை சென்றதாக கோபாலசாமி தெரிவித்துள்ளார். -கி

## சைக்கிள் மோதி வயோதிபர் காயம்

(அரியாலை)

யாழ் மடம் வீதியால் கடந்த சனிக்கிழமை மாலை 7மணிக்கு நடந்து வந்துகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் வேகமாக வந்த சைக்கிளால் மோதப்பட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ் வேம்படி வீதியைச் சேர்ந்த க. மகிலதாஸ் (வயது 64) என்பவரே காயமடைந்தவராவர். (59-இ)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகிறது. இன்றைய ஆட்டத்தில் ஹென்றிஸ் எதிர் அரியாலை ஐ.சி.சி., சென். மேரிஸ் எதிர் குருநகர் இளைஞர் கழகங்கள் மோதுகின்றன. இப்போட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் மைதானத்தில் நடைபெறும். —இ

## குருவாக திருநிலைப்படுத்தல்

(அரியாலை)

யாழ் மறை மாவட்டத்திலுள்ள நாரந்தனையைச் சேர்ந்த அருட் சகோதரர் ஜே. அருள்நேசன், மண்டைதீவைச் சேர்ந்த அ. ப. அந்தோனிப்பிள்ளை, சில்லாலையைச் சேர்ந்த அருட் சகோதரர் ஜே. ஜோர்ஜ் பேரின்பநாதன், அச்சுவேலியைச் சேர்ந்த அல்பேட் ஜோசவ் அருள்ராஜ் ஆகியோர் யாழ். ஆயர் பேரருட்திரு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் எதிர் வரும் 2-ம் திகதி புதன்கிழமை யாழ். புனித மரியாள் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். இவர்கள் தத்தமது பகுதிகளிலுள்ள தேவாலயங்களில் முதல் திருப்பலியை நிறைவேற்றுவார்கள் என தெரிய வருகின்றது. -59-இ

## ஆனைக்கோட்டையில் புதிய அகதி முகாம்

(தண்டத்தீவிப்பு)

ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் 23 சிறிய குடிசைகளைக் கொண்ட புதிய அகதி முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பெரியவிளான், சாந்தை ஆகிய பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலைய காணியில் தற்காலிகமாக தங்கியிருந்த 23 குடும்பங்கள் இந்த புதிய அகதிமுகாமில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். பாலர் பாடசாலை வாசிகசாலை என்பனவும் இந்த முகாமில் அமைக்கப்படுகின்றன. (72)

## குடும்பநல சேவையாளர் போதியளவு இல்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் குடும்ப நல சேவையாளர்கள் போதியளவு இல்லாததினால், சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதென்று யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் டாக்டர் நச்சினார்க்கினியர் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக வடக்கு கிழக்கில் 317 குடும்ப நல சேவையாளர்கள் தேவையாக உள்ளனர். ஆனால் 317 பேர் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றனர். இவர்களில் 129 பேர் சிங்களவர்கள். இவர்கள் அம்பாறை, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலே கடமை புரிகின்றனர்.

மலேரியா நோய் கிளிநொச்சி, வவுனியா போன்ற பிரதேசங்களில் தான் இருந்தது. அந்த நோய் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் பரவியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். -ம-கி

## கௌரவிப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. த. நவரட்ணராஜா ஓய்வு பெறுவதை கௌரவித்தும் அவரது சேவைகளைப் பாராட்டியும் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் யாழ்ப்பாணத்தில் அண்மையில் பாராட்டுவிழா நடத்தியது.

இவ்விழாவில் திரு நவரட்ணராஜா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பல அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன. —155-கி

## இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொது நூலகம் கேட்போர் கூடத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு "இந்துமத மறுமலர்ச்சியும் விவேகானந்தரும்" என்னும் தலைப்பில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இன்று கணித விஞ்ஞான மூலவள நிலையம் ஒன்று உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகத்தினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்திற்கு கல்லூரி அதிபர் திரு நா. சந்தசாமி தலைமை வகிப்பார். —கி

## கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குழுவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் தலைமை தாங்கினார். மாகாணத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தெரிவு செய்யப்படும்போது, அவர்களுக்கான வெட்டுப் புள்ளி குறைக்கப்படும் ஆனால் மாகாணத்தில் அவர்கள் 10 ஆண்டுக் காலம் பணிபுரிந்திருப்பது கட்டாயமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நியமனங்களை வழங்கும்போது அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வழங்கும் நன்னடத்தைச் சம்பந்தமான அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்த உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் இவர்கள் தேசிய புலனாய்வுப் பணியகத்தின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சீ-கி


## நேர்முகம் காணல்

பதவி — புள்ளிவிபரவியலாளர்

எமது நிறுவனத்தில் வெளிக்களப் புள்ளி விபரங்கள் திரட்டுவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதி—

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது 3 பாடங்களில் சாதாரண சித்தி, அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சாதாரண சித்தியும், இப்பணி தொடர்பான 1 வருட முன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

வயது—

19 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவருமாக இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள்

**1994-ம் ஆண்டு பங்குனி மாதம் 2-ம் நாள் காலை 9-00 மணிக்கு**

கீழ்க்காணும் முகவரியில் நடைபெறவிருக்கும்

ஃ நேர்முகங்காணலுக்கு ஃ

தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும், தகுதிச் சான்றிதழ்களுடனும் நேரடியாக வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வருகை தரவேண்டிய முகவரி:

சேரன் பல்பொருள் வாணிபம்,
செயலகம்,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம். (கி-835)

## உலகம் உங்கள் கையில்

பெப்ரவரி மாதம்
உலகை உலா வரவில்லையா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம்
உலகளாவிய
பொது அறிவுக் களஞ்சியமான

★ உலக உலாவை ★

வாங்கிப் படிப்பதுதான்!

ஃ முந்துங்கள் உங்கள் பிரதிகளுக்கு!

உலக உலாச் செயலகம்,
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-838)

